**தலைப்பு 262 – மாத்தறை மாவட்டச் செயலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மாத்தறை மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியல்லாத சொத்துக்கள் மீதான ஒன்றித்த பொழிப்பு அறிக்கையில் ஏனைய நிறுவனங்களில் இருந்து மாற்றங்களின் கீழ் திக்வெல்ல பிரதேச செயலகத்தில் இருந்து மாற்றங்கள் என காட்டப்பட்டிருந்த ரூபா 35,831,907 தொகை குறிப்பிட்ட அட்டவணையில் ரூபா 2,831,907 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 33,000,000 வித்தியாசம் காணப்பட்டது. | தவறுதலாக இந்தப் பிழை ஏற்பட்டிருந்தது. | இந்த வித்தியாசத்தை பதிவேடுகளில் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தினால் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக கொம்ப்டோலர் ஜெனரலிற்கு அனுப்பப்பட்ட அறிக்கை மற்றும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காணப்பட்ட பலவினச் சொத்துக்கள் அலகுகளிடையே ரூபா 61,442,495 | இவ்விரண்டு அறிக்கைகளில் சொத்துக்கள் குறியீட்டில் காணப்பட்ட வித்தியாசங்களின் காரணமாக இந்தத் தவறு ஏற்பட்டிருந்ததுடன் அவ் அறிக்கை ஒன்றிற்கு ஒன்று இணங்கக் கூடியவாறு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இவ்வித்தியாசத்தை சரி செய்து பதிவேடுகள் நாளது வரை ஆக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அவ் வித்தியாசத்திற்கு மேலதிகமாக ரூபா 194,519,038 இற்கான மேலும் சொத்து மீதிகள் கொம்ப்டோலர் ஜெனரலுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் அடங்கியிருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டிற்கான திறைசேரி அச்சுப் பிரதிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்த 08 சொத்து அலகுகளின் ஆரம்ப மீதிகள் இடையே, ரூபா 788.63 மில்லியன் இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் இவ் வித்தியாசத்தை பகுப்பாய்வு செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இவ் வித்தியாசங்கள் விரைவாக சரி செய்யப்பட வேண்டியுள்ளது. |
| (ஈ) | கொம்டோலர் ஜெனராலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி மாவட்ட செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் இனங்காணப்பட்ட காணிகளின் எண்ணிக்கை ஹெக்டயர் 42.7 இற்கான பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தி இருக்காததுடன், 03 பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான காணியின் அளவினை இனங்காணப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் கருமம் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் இது வரை அப் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்திருக்காமை இந்த நிலைமைக்கு காரணமாகி உள்ளது. | விரைவாக இவ் விடயங்களை பூர்த்தி செய்து அக் காணிகளின் பெறுமதியினை பதிவேடுகளில் உட்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

**முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலில் பௌதீக சொத்துக்கள் விற்பனையின் கீழ் காட்டப்பட வேண்டிய ஆண்டின் போது நடைமுறை அல்லாத சொத்துக்கள் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 625,894 | இந்த அலுவலக உபகரணங்கள் மற்றும் சேதமுற்ற பொருட்கள் கைதவிர்ப்புச் செய்யும் போது கிடைத்த பணம் ஒன்று என்பதனால் அதனை ஏனைய தலைப்புகளின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் கீழ் என காட்டப்பட்டது. | அப் பெறுமதி முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட வேண்டும். |

தொகை ஏனைய தலைப்புக்களின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் என காட்டப்பட்டிருந்தது.

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது ஒப்பந்த வேலைகளுக்கான முற்பணங்களாக கூட்டுத்தொகை ரூபா 18,947,261 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 10,782,006 இற்கான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 5 (ஏ) ஏசீஏ 5 (பீ) படிவங்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் இப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்கள் மற்றும் கூலிவேலை முற்பண ஒதுக்கத்தின் கீழும் காட்டப்பட்டிருக்கவில்லை. | இப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. | இப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள படிவங்களின் கீழ் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருந்த போதிலும், அப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் படி பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் நாளது வரை பேணப்பட்டிருக்க வேண்டும். |

### 1.6.5 கணக்காய்வு சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில் அடங்கியிருந்த ஏனைய நிறுவனங்களில் இருந்து தனதாக்கிய சொத்துக்கள், கைதவிர்ப்புச் செய்தல் மற்றும் பெறுமதிகள் வித்தியாசப்படல் தொடர்பான சொத்துக்களின் பெறுமதி என்பன கொம்ட்டோலர் ஜெனரலுக்கு | சொத்துக்களின் குறியீட்டு இலக்கங்களில் வித்தியாசங்கள் மற்றும் நிதிப் பெறுமதியிடுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருக்காமை இதற்குக் காரணமாகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமதியை அவ்வறிக்கையில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அனுப்பப்பட்ட அறிக்கையில் உள்ளடங்கியிருக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியின் சரியான தன்மையை பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 1/2014 கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட வேண்டிய கட்டுநிதித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியினால் கட்டுநிதித் திட்டமொன்று கேட்டிருக்காமையால் அவ்வாறாதொன்று தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக ரூபா 13,369.3 மில்லியனிற்கான ஏற்பாடுகள் விண்ணப்பித்திருந்த போதிலும் ரூபா 6,086.6 மில்லியனிற்கான ஏற்பாடொன்று மாத்திரம் கிடைத்திருந்தது. ஆண்டின் ஜுலை மற்றும் திசெம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதியை விட கூடுதலாக கிடைத்திருந்த கட்டுநிதி முறையே ரூபா 71.6 மில்லியன் தொகை மற்றும் 650.2 மில்லியன் தொகை என 15 சதவீதம் மற்றும் 117 சதவீதத்தினால் மிகையாக கிடைத்திருந்தது. ஏனைய 10 மாதங்களிற்காக விண்ணப்பித்திருந்த கட்டுநிதியை விட குறைவாக கிடைத்திருந்ததுடன் அவை ரூபா 24 மில்லியனிற்கான மற்றும் ரூபா 1,820 மில்லியன் வீச்சில் காணப்பட்டது. | சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஏற்படுகின்ற நிதித் தேவை மீது திறைசேரியினால் கட்டுநிதிகள் வழங்கப்படுவதனால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | இந்த நிலைமையை முடியுமானளவு குறைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கட்டடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் 08 செயற்திட்டங்களுக்காக ரூபா 64.6 மில்லியனிற்கான ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 28.4 மில்லியன் செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 36.1 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. | கோவிட் 19 தொற்றுநோயின் தாக்கம் இதற்கு காரணமகாக இருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளை உச்சமட்ட அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீண்டுவரும் செலவு விடயம் ஒன்று தொடர்பாக மொத்த தேறிய ஏற்பாடுகளில் 46 சதவீதம் மற்றும் 02 மூதலன செலவு விடயங்கள் தொடர்பாக மொத்த தேறிய ஏற்பாடுகளில் முறையே 9 சதவீதம் மற்றும் 56 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. உரிய முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்காமை மற்றும் வழங்கியிருந்த ஏற்பாடுகளை உரிய முறையில் பயன்படுத்தப்படாமையின் காரணமாக இவ்வாறு ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்த்தவாறு செலவுகள் மேற்கொள்ளப்படாமை இதற்கான காரணமாகும். | எதிர்பார்க்கும் செலவுகள் நடைமுறைச் சாத்தியமாக எதிர்வு கூறுவதற்கும் பெறப்படும் மொத்த ஏற்பாடுகளை உச்ச மட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 09 செலவு விடயங்களின் மதிப்பீட்டு ஏற்பாடுகள் போதிளவாக காணப்படாமையால் வேறு 07 செலவு விடயங்களில் இருந்து 0.1 சதவீதம் முதல் 19 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் மாற்றப்பட்டு செலவிடப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் போதிளவாகக் காணப்படாமை இதற்கு காரணமாகும். | செலவுத் தேவைகள் முடிந்தளவு சரியாக இருக்கக் கூடியவாறு எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 07 செலவு விடயங்களின் மதிப்பீட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தப்படாமையால் அவ்வேற்பாடுகளில் 01 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | செலவு முகாமைத்துவம் காரணமாக இந்த செலவு விடயங்களின் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | - மேற்படி - |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 1,113 இற்கான பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 115 கீழ் அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இந்த பொறுப்புக்களை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

46 அமைச்சுக்களில் இருந்து, 23 திணைக்களங்களில் இருந்து மற்றும் 05 நிறுவனங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 4,695 மில்லியன் தொகையும், ரூபா 305 மில்லியன் தொகையும் மற்றும் ரூபா 15 மில்லியன் தொகையும் என கூட்டுத்தொகை ரூபா 5,015 மில்லியனிற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. அவ் ஏற்பாடுகளில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 4,648 மில்லியன் தொகையும் ரூபா 287 மில்லியன் தொகையும் மற்றும் ரூபா 15 மில்லியன் தொகையும் என கூட்டுத்தொகை ரூபா 4,950 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி முறையே ரூபா 47 மில்லியன் தொகையும், ரூபா 18 மில்லியன் தொகையும் மற்றும் ரூபா 0.1 மில்லியன் தொகையும் என ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 65 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது சதவீதமாக முறையே 1.01 சதவீதமும், 5.74 சதவீதமும் மற்றும் மற்றும் 0.66 சதவீதமுமாக காணப்பட்டது.

**2.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப்பகுதியுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளித்தல் மேற்கொள்ளப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு | பல்வேறு பிரிவுகளில் இருந்து மற்றும் பிரதேச செயலகங்களில் இருந் பதில் பெற்றுக்கொள்ள நேரிடுவதனால் இத்தாமதங்கள் ஏற்படுகின்றன. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அறிக்கையில் பந்தி 3.7 இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்திருக்கவில்லை.

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| xxiv அத்தியாயத்தின் பந்தி 4.4 மற்றும் பந்தி 4.5 | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணம் பிரதான கடனாளியிடம் அறவிட முடியாத சந்தர்ப்பத்தில் கடைபிடிக்க வேண்டிய செயற்பாடுகளை கடைபிடிக்காமையால் தெவிநுவர பிரதேச செயலகத்தை சேர்ந்த வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் கொடபொல பிரதேச செயலகத்தில் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 87,852 ற்கான கடன் மீதிகள் 05 வருடங்களை விட மிகையான காலம் தீரக்கப்படாது காணப்பட்டது. | சட்டமா அதிபரின் அறிவுரை பெற்றதுடன் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பிக்கின்றேன். | இந்த தொகையை விரைவாக தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------------------- | | | |
| (i) நிதிப் பிரமாணம் 215(1) மற்றும் நிதிப் பிரமாணம் 218 | ஏதேனும் கருமமொன்றில் ஈடுபடுத்தும் கருத்துடன் எக்காரணத்தினாலும் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடாது, எனினும், 02 செலவு விடயங்கள் தொடர்பாக விலைப்பட்டி பெறுமதியை விட மிகையாக செலுத்தியிருந்த ரூபா 8,248 தொகையினை நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்திருக்கவில்லை. | மேலதிக கொடுப்பனவொன்று ஏற்பட்டிருப்பின் எதிர்காலத்தில் அதனை நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வேன். | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 06 வாகனங்களில் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | தற்போது ஓட்டத்தில் காணப்படும் வாகனங்கள் தொடர்பாக நாளந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | ஓட்டத்தில் காணப்படும் அனைத்து வாகனங்களின் ஓட்ட அட்டவணைகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) பொது நிருவாக சுற்றறிக்கைகள்<br>----------------------------- | | | |
| (i) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமாக வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான எரிபொருள் பரிசோதனை ஒன்று கணக்காய்வுத் திகதியாக 2021 பெப்ரவரி 28 திகதி வரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இதற்காக விசாரணை குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) 2006 ஜுலை 14 திகதிய 11/2006 இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3(iv) | ஒதுக்கப்பட்ட 02 வாகனங்கள் தொடர்பா க பொது 238 நாளாந்த ஓட்ட அட்டவணைகளுக்குப் பதிலாக சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு பேணப்பட்டிருக்கவில்லை. | இந்த ஓட்ட அட்டவணை மாவட்ட செயலகத்தில் பேணப்பட்டு வந்துள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு கணக்காய்விற்கு ஓட்ட அட்டவணைகள் அனுப்பப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (iii) 1999 ஒக்தோபர் 08 திகதிய 22/99 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி I | அரச கருமங்களுக்காக அலுவத்திலிருந்து வீடு வரை போதல் வருதலுக்காக உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று பயன்படுத்தக்கூடியதாக இருந்த போதிலும், அதற்கு இணக்கமின்றி மாவட்ட செயலாளருக்கு 02 உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. | உத்தியோகபூர்வ வாகனம் அடிக்கடி திருத்த வேலைகளுக்கு உள்ளாவதனால் மேலதிக கப் வண்டி ஒன்று பெற்றுக்கொள்ளத் தேவையாக இருப்பதாக அறிவித்திருந்ததுடன், அதற்காக அதற்காக அரசாங்க எரிபொருள் பயன்படுத்தப்படுவதில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) நிதியமைச்சுச் சுற்றறிக்கைகள் | | | |
| 2017 ஜுன் 28 திகதிய 01/2017 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 7 | 2018 ஆண்டின் முதல் நிறுவனத்தினால் தனதாக்கல் மற்றும் கைதவிர்ப்புச் செய்யும் அனைத்து சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ப்டோலர் ஜனரால் அலுவலத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது தகவல்கள் வழங்குவதற்கு தேவையான வசதிகள் உரிய முறையில் வழங்கியிருக்காமை இதற்கான காரணமாகும். | சொத்துக்களின் பெறுமதிகளில் ஏற்படும் வித்தியாசங்களை நாளதுவரையாக்கி கொம்ப்டோலர் ஜனராலுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக வரி அறவீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 நவம்பர் 29 திகதிய பெறுமதி கூட்டியவரி திருத்த சுற்றறிக்கையின் படி 2019 திசெம்பர் 01 திகதி முதல் செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி சதவீதம் 15 சதவீதம் முதல் 8 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்த போதிலும், கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமய வழிபாட்டு நிலையங்களுக்காக சூரிய பெனல்கள் பொறுத்தும் செயற்திட்டத்தின் ஒப்பந்தக் கார நிறுவனம் ஒன்றிற்கு 2019 திசெம்பர் 29 திகதி இறுதி பில் பத்திரம் செலுத்தும் போது 15 சதவீதப்படி ரூபா 1,015,980 ற்கான பெறுமதி கூட்டியவரி செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு பில் பத்திரம் சமர்ப்பித்தல் இவ் வரித்திருத்த சுற்றறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் மேற்கொள்ளப் பட்டிருந்தமையால் இவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த தொகையினை அறவீடு செய்ய வேண்டும். |

## 2.8 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஒக்தோபர் 05 திகதய HAF/ADMIN/DRIVERS/2016/23 இலக்கங் கொண்ட உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் (நிருவாகம்) இன் கடிதத்தின் மூலம் மேல் மாகாண போக்குவரத்து அமைச்சின் மாகாண அரச சேவை சாரதி ஒருவர் சம்பளம் மீளளிப்பு செய்யும் அடிப்படையில் 2016 ஒக்தோபர் முதல் மாவட்ட செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஒக்தோபர் முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 542,070 தொகைக்கான சம்பளங்கள் மற்றும் படிகளை மீளளிப்பு செய்யப்பட்டிருக்காததுடன், இந்த இணைப்பிற்கான முறையான அங்கீகாரம் ஒன்றும் காணப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | இச் சம்பள கொடுப்பனவு மற்றும் பதவியை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாத்தறை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான அரச உத்தியோக பூர்வ வாசஸ்தளம் 2014 ஆக்ஸ்ட் மாதம் முதல் 2017 ஜூலை 12 திகதி வரையான காலப் பகுதி வரை வேறு ஒரு பகுதியைச் சேர்ந்த பிரதேச செயலாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் தாபனக் கோவையின் xix அத்தியாயத்தின் 5.7 பிரகாரம் வீட்டு வாடகை அறவீடு செய்திருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் படி மாத்தறை பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் xix அத்தியாயத்தின் 5.7 பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.9 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் கூட்டுத்தொகை ரூபா 56,479,262 தொகைக்கான 02 வருடங்களை மிகைத்துள்ள 196 வைப்புக்கள் தொடர்பான மீதிகள் தொடர்பாக | இந்த மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்திக்கவில்லை. அவற்றில் ரூபா 10,225,831 தொகைக்கான 39 வைப்புக்கள் 05 வருடங்களை மிகைத்திருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாத்தறை மாவட்டச் செயலகத்தினால் மீளாய்வாண்டின் முதலாவது காலாண்டிற்காக மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்காக மாத்திரம் செயல் நடவடிக்தை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பெரலிய விரைவான கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (RRDP) 2019 இன் கீழ் வெலிகம தேர்தல் தொகுதியில் உள்ள வணக்கஸ்தலங்களுக்காக சூரிய சக்தி வழங்கும் செயற் திட்டத்தின் கீழ் வெலிகம பிரதேச செயலக பிரிவில் 41 சமய வழிபாட்டுத் தலங்களுக்கு மற்றும் வெலிபிட்டிய பிரதேச செலயகப் பிரிவில 34 சமய வழிபாட்டுத் தலங்களில் 18 வணக்கஸ் தலங்களுக்கு சூரிய மின்கலங்கள் மூலம் உருவாக்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | பின்னர் பதிலளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குறிப்பிட்ட ஒப்பந்த நிறுவனத்தினால் பணம் பெற்றிருந்த போதிலும் உரிய முறையில் மின்சார சபைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத மற்றும் பணம் செலுத்தாமை மீது மின் தொடர்பு வழங்கியிருக்காமை 10 சமய வழிபாட்டுத் தலங்களில் காணப்பட்டது. | பல்வேறு நடைமுறை சிக்கல்கள் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டுள்ளது. | இவ் விடயங்களை முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | உரிய முறையில் மின்சாரத் தொடர்பு வழங்கியிருந்த சமய வழிபாட்டுத் தலங்களின் தலைவர்களுடன் மின்சார சபை உடன்படிக்கை கையொப்பமிட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் அறிவிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வெளிக்கள பரிசோதனை அறிக்கையின் மூலம் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத வேலைப் பகுதிகள் மற்றும் தொடர்ந்தும் முன்னேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறிப்பிடப்பட்டு மாவட்ட செயலாளரை அறிவுறுத்தியிருந்த போதிலும், அக் குறைபாடுகள் மற்றும் முன்னேற்ற வேலைகளை ஒப்பந்தக்காரரின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளாமல், 03 நிறுவனங்களுக்கு 75 சூரிய மின் கலன்கள் பொறுத்தப்பட்டதாக வரியின்றி ரூபா 32 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | 10 சதவீத தடுத்து வைத்தல் பணம் பிடிக்கப்பட்டு அப் பணம் விடுவிக்கப்பட்டது. | இந்த நிலைமை சரிசெய்யப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெலிபிட்டிய பிரதேச செயலகத்தினால் ரூபா 500,000 இற்கான மதிப்பீட்டுத் தொகை ஒன்றின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக காலம் போதியளவினதாக காணப்படாமையின் காரணமாக இச் செயற்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. | செயற்திட்ட திட்டம் சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் காலப் பகுதி நியாயமாக மற்றும் நடைமுறை சாத்தியமாக இருக்க வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முலடியன பிரதேச செயலகத்தினால் சபிரிகமக் கிராமிய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி வேலைத் திட்டம் மற்றும் கிராமிய வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 20 மில்லியன் இற்கான மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 35 செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் 10 நாட்கள் முதல் 169 நாட்கள் வரையான தாமத காலத்தின் பின்னர் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக நாட்டில் காணப்பட்ட நிலைமை இதற்கு காரணமாகும். | உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்த காலப்பகுதியுள் செயற்திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் அவ்வாறு முடியாத சந்தர்ப்பங்களில் நியாயமான காரணங்களினால் கால நீடிப்பு மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்ககப்பட வேண்டும். |

## 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் ஒன்று பெற்றிருக்காத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை நில்வலா அபிவிருத்தி செயற்திட்டம் 2018-2020 உள்ளக உள்நாட்டு விவகார மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 715 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 ஜனவரி 10 ஆந் திகதிய MNPEA/PLN/2019 இலக்கங் கொண்ட தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டப் பிரேரணை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பபட்டு அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் கருமங்கள் வருடாந்தம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றில் உட்படுத்தப்பட்டு விடயத்திற்கு பொறுப்பான | மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் மூலம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் செயற்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2019 நவம்பர் 20 ஆந் திகதிய BD/GPS/ISS/09/01/NA/2019 இலக்கங் கொண்ட அனைத்து மாவட்ட செயலாளர்களையும் அழைத்த திறைசேரி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத செயற்திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து அறிவிக்கும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தும் படி அறிவித்திருந்த போதிலும் அதற்கு இணங்காமல் 2020 திசெம்பர் 23 திகதி மாவட்ட செயலகத்தின் பெறுகை குழுவினால் கூட்டுத்தொகை ரூபா 254.4 மில்லியன் தொகைக்கான நீர்க்கூழாய் விரிவுபடுத்தும் 14 புதிய செயற்திட்டங்களை செயற்படுத்தல் தொடர்பாக பெறுகை தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தது. | மாவட்ட ஒன்றினைப்புக் குழு தீர்மானத்தின் மீது திறைசேரி செயலாளரை அறிவுறுத்தி இவ்வாறு மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 31 திகதி அளவில் நீர் குழாய் விரிவாக்கல் செயற்திட்டமொன்று தொடர்பாக 09 செயற்திட்டங்களுக்காக பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 35.4 மில்லியனிற்கான 04 காசோலைகள் முகாமையாளர் (செ.ம.ப.) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு வழங்கியிருந்த போதிலும், 2021 மார்ச் வரை கூட்டுத்தொகை ரூபா 33.8 மில்லியனிற்கான 07 செயற்திட்டங்களுக்கு நலன் பெறுவோரினால் நீர்க்குழாய் விரிவாக்கலுக்காக கான் வெட்டியிருக்காமையால் செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பெறுமதியில் 30 சதவீதமாகிய நீர்க்குழாய் மற்றும் துணைக் கருவிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன். | இவ்வாறு பயன்படுத்தப்படாது காணப்படும் பணம் தொடர்பாக விரைவாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் நலன் பெறுவோருக்கு அச் செயற்திட்டங்களின் நலன்கள் விரைவாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நில்வலா எலிய செயற்திட்டம் தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 78.6 மில்லியன் இற்கான 09 நிர்மாண வேலைகள் தொடர்பாக கூட்டுப்பெறுமதி ரூபா 3,844,624 தொகைக்கான 09 செயலாற்றல் பிணை முறிகளின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்து 02 மாதங்கள் மற்றும் 11 மாதங்கள் வரை வீச்சில் காணப்பட்ட போதிலும் குறிப்பிட்ட நிர்மாண வேலைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், ஒப்பந்த காலமும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பாதுகாப்பு முறிகளின் செல்லுபடியாகும் காலத்தை கால நீடிப்பு செய்து தரும்படி ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 2020 மே 15 திகதிய DSM/DPS/Nilwala/24/2019 இலக்கங் கொண்ட மாத்தறை மாவட்டச் செயலாளரினால் செயலாளர் பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பியிருந்த கடிதத்தின் மூலம் இச் செயற்திட்டம் தொடர்பாக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் பௌதீக முன்னேற்றம் 100 சதவீதம் என சுட்டிக் காட்டப்பட்டு கையிலுள்ள விலைப்பட்டியல் என 48 நிர்மாண வேலைகள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 400.55 மில்லியன் தொகை பெறுமதியான பில் பத்திரங்கள் காணப்படுவதாக குறிப்பிட்டு அதற்கான கட்டுநிதி வழங்குமாறு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு கையிலுள்ள பில் பத்திரங்கள் என சமர்பிக்கப்பட்டிருந்த ரூபா 329 மில்லியன் தொடர்பான நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு ஊடாக செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான காரணமாகும். | முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கும் போது சரியான நிலைமைகளை காட்டுவதற்கும் இந்த செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | செயற்திட்டங்களின் கீழ் செயற்படுத்த வேண்டியிருந்த 05 நிர்மாண வேலைகளுக்காக தேசிய போட்டி கூறுவிலை அழைப்பின் அடிப்படையில் செய்தித்தாள் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்த | மதிப்பீடுகளை திருத்துவதற்கு நேரிட்டமையே இதற்கு காரணமாகும். | இந்த பயனற்ற செலவுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் பின்னர் அச் செயற்திட்டங்களின் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 166,174 தொகை பயனற்ற செலவொன்றாகியிருந்தது. | | |
| (எ) | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் ஏற்பாடுகளின் மீது செயற்படுத்தப்படும் சிங்கராஜ விஷேட ஒன்றித்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தின் பிடபெத்தர பிரதேச செயலக பிரிவில் செயற்படுத்தப்பட்ட 03 நீர்த்திட்டங்களில் ரூபா 23.3 மில்லியன் தொகை பெறுமதியான இரண்டு செயற்திட்டங்கள் கணக்காய்வு திகதியாகிய 2020 ஆகஸ்ட் 20 திகதியளவிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல் இச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 2019 ஜுலை 10 திகதி ரூபா 10.4 மில்லியன் தொகை மற்றும் 2019 நவம்பர் 21 திகதி ரூபா 14.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இச் செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து தரும்படி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையை கோரியிருந்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது உடன்படிக்கை மேற்கொள்ளும் இயலுமை தொடர்பாக கண்டறிவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இச் செயற்திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான மஹிந்த விஜேசேகர விளையாட்டுத்திடல் 2018 மே 22 திகதி முதல் முறைசாரா விதமாக மாத்தறை மாவட்ட மாவட்ட செயலாளருக்கு உரித்தாக்கி மாத்தறை மாவட்ட அரச சேவை விளையாட்டு கழகம் ஒன்று நிருவப்பட்டு அக்கழகத்திற்கு | இந்த விளையாட்டுத் திடலை மீண்டும் மாவட்ட செயலகத்திற்கு உரித்தாக்கி வருமானத்தை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அரச சொத்துக்கள் தொடர்பாக முறைசார் விதமாக செயற்பட வேண்டும். |

சாட்டப்பட்டிருந்ததுடன், விளையாட்டுத் திடளை ஒதுக்கும் வருமானம் அரச வருமானத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் விலையாட்டுக் கழகத்தின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகனப் பயன்பாடு
--------------------------------

| | | |
|---|---|---|
| (i) மாவட்ட செயலகம் மற்றும் 16 பிரதேச செயலங்களுக்கு சொந்தமாக காணப்படும் 34 வாகனங்களில் 02 கப் வண்டிகளுக்காக ஆண்டின் போது சாரதிச் சம்பளங்கள் மற்றும் படிகள் தவிர ஏனைய செலவுகள் என ரூபா 462,580 தொகை மற்றும் 393,105 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அவை ஓடியிருந்த கிலோமீற்றர்களின் எண்ணிக்கை முறையே 5071 தொகை மற்றும் 9220 தொகையாக காணப்பட்டமையால் ஒரு கிலோமீற்றருக்கான செலவு முறையே ரூபா 91.22 மற்றும் ரூபா 42.64 தொகை ஆக காணப்பட்டது. | இவ் வாகனம் பழைய வாகனம் ஒன்றாக இருந்தமையால் பழுதடைதல் மற்றும் திருத்த வேலைகள் மிகையாக காணப்பட்டமை இதற்கான காரணங்களாகும். | பழைய வாகனங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (ii) மாவட்ட செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களுக்கு சொந்தமாக 11 முச்சக்கர வண்டிகள் காணப்பட்டதுடன், அதற்காக ஆண்டின் போது சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஏனைய செலவுகள் என ரூபா 537,236 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் 02 முச்சக்கர வண்டிகள் எதுவித ஓட்ட தேவைகளுக்கும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 02 முச்சக்கர வண்டிகள் ஆண்டின் போது 114 கிலோமீற்றர் மற்றும் 500 கிலோமீற்றர்கள் மாத்திரம் ஓடியிருந்தமையால் கிலோமீற்றருக்கான செலவுகள் முறையே ரூபா 81.76 தொகை மற்றும் ரூபா 26.23 தொகையாக காணப்பட்டது. | சாரதிகள் உறுதியாக ஒதுக்கப்பட்டிருக்காமையால் சேவையின் தேவையின் அடிப்படையில் அலுவலக உதவியாளர்களை ஈடுபடுத்தி சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இந்த வாகனங்கள் உச்சமட்ட பயன் பெறக்கூடிய விதமாக பயன்படுத்துவதற்காக மிகை தேவையுள்ள நிறுவனங்கள் காணப்படின் அந் நிறுவனங்களுக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் சமர்பிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு சமர்பிக்கப்பட்டிருந்த 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக மற்றும் 06 பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2021 மார்ச் 29 திகதி வரை பதில் கிடைத்திருக்கவில்லை. | பல்வேறு பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகங்களிலிருந்து தேவையான தகவல்கள் பெற்ற பின்னர் விரைவாக பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட காலப் பகுதியில் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) தலைப்பு இலக்கம் 194 விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாடுகளில் ரூபா 20 மில்லியன் தொகை மற்றும் தலைப்பு இலக்கம் 219 விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள ஏற்பாடுகள் ரூபா 75 மில்லியன் தொகை மீது விளையாட்டுத் திடல்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் 2020 கீழ் 38 கரப்பந்தாட்ட விளையாட்டு திடல்களை மற்றும் 02 பொது விளையாட்டுத் திடல்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 100 மில்லியனுக்கான தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2020 ஆண்டின் போது பூர்த்தி செய்யவேண்டியிருந்த இச் செயற்திட்டங்களில் 2020 நவம்பர் 17 திகதி வரை 14 செயற்திட்டங்களுக்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், 06 செயற்திட்டங்களுக்காக மீளமைக்கப்பட்ட இடங்களை இனங்கண்டு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்தது. 02 செயற்திட்டங்கள் தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>இவற்றில் 3 தொகுதிகளைச் சேர்ந்த 10 செயற்திட்டங்கள் 2020 நவம்பர் 17 திகதி கணக்காய்வு திகதி வரை வேலைகள் | நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை இதற்கு காரணமாக இருந்தது. | உடன்படிக்கைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும், உடன்படிக்கையின் நிபந்தனை 6.4 இன் படி செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | DSM/DPS/VB/B தொகுதியின் செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் 2020 செப்தெம்பர் 30 திகதி காலவதியாகியிருந்த போதிலும் கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விலைப்பட்டியல் செலுத்தும் போது செயலாற்றல் பிணைமுறையின் பெறுமதியை கழித்து பொது வைப்பு கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட காலப்பகுதியில் செயலாற்றல் பிணைமுறிகளின் கால நீடிப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) | பெறுகை நடைமுறைக்கு புறம்பாக மற்றும் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மாகந்துரை டெனி ஹித்தெடிய விளையாட்டுத் திடல், அகுரஸ்ஸ எல்லேவல கனிஷ்ட வித்தியாலய விளையாட்டுத் திடல், திக்வெல்லை வலஸ்கல கரப்பாந்தாட்ட விளையாட்டுத் திடல், யடியன வயர்லஸ் வத்த காணியுள் அடங்கியுள்ள விளையாட்டுத் திடல் ஆகிய செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | பதில் சமர்ப்பித்திருக்கவில்லை. | செயற்திட்டங்கள் செயற்படுத்தும் நடைமுறை சரியாக கடைபிடிக்கப்பட வேண்டும். |
| (iv) | மாறை/கிரிந்த புஹுல்வெல்ல மஹா வித்தியாலயத்தின் விளையாட்டுத் திடலின் அபிவிருத்தி வேலைக்காக 2019 ஆண்டின் போது ரூபா ஒரு மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு அவற்றில் ரூபா 898,582 தொகை செலவிடப்பட்டு நீளப்பாய்ச்சல் கிடங்கொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு தடையாக அமையுமாறு மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவின் மூலம் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் மூலம் ரூபா 2.16 மில்லியன் தொகை செலவிடப்பட்டு பகல் /இரவு கரப்பாந்தாட்ட திடல் ஒன்று தயாரிக்கப்பட்டமையால் இச் செலவு பயனற்றதாகியுள்ளது. செயற்திட்டம் பூர்த்தி செய்த பின்னர் பெறுகை நடைமுறையைப் போலவே முன் விசாரணை அறிக்கை மற்றும் முன் சாத்தியக்கூறு அறிக்கை பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொருளாதார அபிவிருத்தி உத்தியோத்தர்களினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டிருந்த வேலைப் பகுதிகளை குறிப்பிட்ட முன்விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்கள் செயற்படுத்தும் நடைமுறைகள் சரியாக பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | புஹுல்வெல்ல மஹா வித்தியாலய விளையாத்திடல் மற்றும் பகல் இரவு கரப்பந்தாட்ட விளையாட்டுத்திடல் ஆகிய இரண்டு செயற்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு முன்னர், அதிபரின் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் | மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட திட்டமொன்று என்பதனால் குறிப்பிட்ட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் பெற்றிருக்காததுடன், இரண்டு செயற்திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் முறைசார் விதமாக அதிபருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) முருதமுரய பொது விளையாட்டுத் திடல்களில் அமைந்துள்ள கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை மேற்பார்வை செய்த தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் படி அந்த செயற்திட்டத்தை முன்கொண்டு செல்லும் படி கோரிய போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் வலைகள் அடிக்கும் போது 23.56 சதுர மீற்றர்கள் மிகையாக அளவை செய்யப்பட்டிருந்தது. விடய இலக்கம் $B_4$ இன் படி 50.55 கன மீற்றர் தொகை மண் போடப்பட்டு தகர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் முன்கொண்டு செல்லப்பட்டிருந்ததுடன், பகுதி கொடுப்பனவு ஒன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இக் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மாத்தறை மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்காக வங்கிக்கு பணம் செலுத்தும் போது ஒரு சாரதி பாடசாலையினால் ரூபா 649,200 ற்கான தொகையொன்று தகாத முறையில் பெற்றிருந்ததுடன், இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சாரதிப் பாடசாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நடைமுறையிலுள்ள அகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) மாத்தறை மாவட்ட செயலாளரினால் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக வாழ்வாதாரமற்ற குடும்பங்கள்/ ஆட்களுக்காக ரூபா 5,000 தொகை படி கொடுப்பனவு செய்தல் | | |
| (i) திஹகொட பிரதேச செயலயத்தை சேர்ந்த கிதலகம் கிழக்கு III கிராம உத்தியோத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் 16 நலன் பெறுவோருக்குரிய ரூபா 5,000 தொகை கொடுப்பனவு மற்றும் 07 நலன் பெறுவோருக்கான முதியோர் கொடுப்பனவு மொத்தம் ரூபா 116,700 தொகை குறிப்பிட்ட தினத்தில் நலன்பெறுவோருக்கு வழங்கியிருக்கவில்லை. முறையே 56 நாட்கள் மற்றும் 65 நாட்கள் வரையான காலம் கையில் தக்க வைத்து பணத்தை உரிய முறையில் நலன்பெறுவோருக்கு | குற்றஞ் சாட்டப்பட்ட பெண் உத்தியோத்தர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. | இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு தேவையான மேற்பார்வையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையும் வலுப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டதென காட்டக்கூடிய விதமாக கையொப்பப் பதிவேடு பொய்யாக தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) பஸ்கொட பிரதேச செயலகத்தை சேர்ந்த ஹுலங்கந்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் 03 பயனாளிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,000 தொகை மற்றும் இறந்த நபர் ஒருவருக்கான ரூபா 5,000 தொகை ஆக மொத்தம் ரூபா 20,000 தொகை குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டதென பொய்யான கையொப்ப பதிவேடு தயாரிக்கப்பட்டு பணம் கைவசம் வைக்கப்பட்டிருந்தது. | இந்த பெண் உத்தியோகத்தர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று ஆரம்பிப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. | இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு தேவையான மேற்பார்வையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையும் வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) 2020 ஏப்ரல் 16 திகதிய DSH/HO/DG/சுற்றறிக்கை இலக்கங் கொண்ட சமூர்த்தி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் ‘‘ஊரடங்குச் சட்டம்’’ செயற்படுத்தப்பட்டிருந்ததன் மீது நிரந்தர வதிவிடத்துக்கு வெளியே வேறு ஒரு இடத்தில் தங்கியிருக்கும் சமூர்த்தி பயனாளிகளுக்கு ஒரே தடவையில் செலுத்தும் ரூபா 5,000 தொகை சமூகநலன் கொடுப்பனவு, உதவிநிதி பெறுவோரின் எழுத்துமூல விண்ணப்பத்தின் மீது வதியும் வீட்டில் வாழும் நெருங்கிய உறவினர்களுக்கு செலுத்துவதற்கு அல்லது அந்த உதவி நிதி பெறுவோரின் அங்கத்துவக் கட்டண வைப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பஸ்கொட பிரதேச செயலகத்தினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேர்ந்த 15 நலன் பெறுவோருக்காக சுற்றறிக்கையின் பிரகாரம் ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 150,000 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏப்ரல் மாதத்தில் இந்த நபர்கள் குறிப்பிட்ட கிராமத்தில் வசித்திருக்காததுடன், மே மாதத்தில் குறிப்பிட்ட பணம் செலுத்தப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) 07 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேரந்த 31 சமூர்த்தி பயனாளிகளுக்காக ஏப்ரல் மாதத்திற்கான செலுத்த வேண்டிய கொடுப்பனவு கூட்டுத்தொகை ரூபா 155,000 தொகை செலுத்தப்பட்டிருக்காததுடன், மே மாதத்திற்கான பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | பல்வேறு காரணங்களினால் இந் நிலைமை ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பஸ்கொட பிரதேச செயலகத்தினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றி சலுகை கடன் அடிப்படையின் கீழ் அரச சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் 06 பேருக்கு ரூபா 30,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதியாகிய 2021 மாரச் 31 திகதி வரை அத்தொகை திருப்பி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டாய வைப்புக் கணக்கு மீதியினை அடிப்படையாகக் கொண்டு கடன் நிபந்தனையின் கீழ் கடன் தொகையொன்று செலுத்தப்பட்டதுடன் அவற்றை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் சிங்கராஜ விஷேட ஒன்றித்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொங்கிரீட் பாதை ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 5.9 மில்லியன் தொகைக்கான உடன்படிக்கை பெறுமதிக்கு தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2019 ஜுலை 05 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2019 செப்தெம்பர் 03 திகதி அளவில் ஒப்பந்த வேலைகள் உடன்படிக்கையின் படி பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், ஒப்பந்தகாரரினால் அத்திகதியளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் 2019 திசெம்பர் 31 திகதி வரை ஒப்பந்தத்திற்குரிய செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் கடந்திருந்ததுடன், ரூபா 296,417 ற்கான பெறுமதியில் ரூபா 130,998 தொகையினை அறவீடு செய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு இயலாது போயுள்ளது. அதன் காரணமாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 475,146 தொகைக்கான செலவு பயனற்றதாகியுள்ளது. | இந்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விரைவாக இந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்களின் அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்சித் திட்டம் 2018 இன் கீழ் ரூபா 1,557.94 மில்லியனிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் 2019 ஆண்டின் போது ரூபா 300 மில்லியனுக்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. அவ் ஏற்பாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட 03 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்த கம்பனி ஒன்றினால் வழங்கியிருந்த ரூபா 17.0 மில்லியன் தொகைக்கான 02 முற்பண பிணை முறிகள் மற்றும் ரூபா 5.9 மில்லியனுக்கான 03 | குற்றப்புலனாய்வு பிரிவினால் நடாத்தப்படும் விசாரணையின் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். |

செயலாற்றல் பிணை முறிகள் போலியானவை என உறுதிப்படுத்தப்பட்டதுடன் ஒப்பந்தக்காரரினால் தற்போது அச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தரினால் தேவையான சந்தர்ப்பங்களில் முறையாக கவனம் செலுத்தப்படாமை மற்றும் பெறுகை மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினால் தமது பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படாமை இதற்கான காரணமாகியுள்ளது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டம் 2030 தொடர்பாக 2020 ஆண்டின் போதும் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது பெற்றிருந்த ஏற்பாடுகளின் அடிப்படையில் 3 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் இனங்கண்டிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டம் 2030 இன் படி 14 குறிக்கோள்கள் தொடர்பாக கவனம் ஏதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் 14 குறிக்கோள்களை இனங்கண்டு நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) இலக்கங் கொண்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்தவாறு | எதிர்காலத்தில் தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

பிரஜைகள்/ சேவைகொள்வோர் சாசனம் தயாரித்து செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் மாத்தறை மாவட்டச் செயலகம் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை.

## 6. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 1733 தொகையும், உள்ளவாறான பதவியணி எண்ணிக்கை 1623 தொகையாக காணப்பட்டமையால் பதவியணியில் காணப்படும் 141 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 31 பேரைக் கொண்ட மிகைப் பதவியணியினை முறைப்படி அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அத்தியவசிய பதவிகளை நிரப்புவதற்கும் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாக செயலாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அனைத்து பதவியணிக்குமாக மேற்கூறிய சுற்றறிக்கையின் இணைப்பு 1 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மனிதவள திட்டம் தயாரிக்கப்பட்டு அவற்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |